அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
INTERNATIONAL COUNCIL FOR EDUCATIONAL DEVELOPMENT OF TAMILS

# அரையாண்டுத்தேர்வு

## 2022/2023

# தமிழ்

## ஆண்டு 10

| | |
|---|---|
| **நேரம்: 180 மணித்துளிகள்** | **மொத்தப்புள்ளிகள்:** 80<br>(எழுதுதல் 65 புள்ளிகள், வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும் 15 புள்ளிகள்) |
| **நாள்: சனிக்கிழமை** | **பக்கங்கள்:** 15 |
| **பெயர்:** | |
| **தமிழ்ப்பள்ளி:** | |

## பகுதி 1 - எழுதுதல்

**1. மிகப்பொருத்தமான விடைக்குரிய கட்டத்திற்குள் புள்ளடி இடுக.**

1 2 3 4

1. பாட்டி குடுகுடு என நடந்து வந்தார். இதில் குடுகுடு என்பது
   1. இணைமொழி
   2. அடுக்கிடுக்குத்தொடர்
   3. இரட்டைக்கிளவி
   4. அடுக்குத்தொடர்

2. அரங்கு பற்றிய செய்திக்குறிப்பு இடம்பெற்றுள்ள நூல்
   1. மணிமேகலை
   2. குண்டலகேசி
   3. வளையாபதி
   4. கலித்தொகை

3. தமிழ் மரபைச் சாராத அரசர்கள்
   1. சேரர்
   2. பல்லவர்
   3. பாண்டியர்
   4. சோழர்

4. மொழிக்கு முதலில் வரும் எழுத்துகளின் எண்ணிக்கை
   1. 216
   2. 12
   3. 18
   4. 100

5. ஏழு ஆண்டுகள் ஆடலை முழுமையாகப் பயின்று அரங்கேறியவர்
   1. தமயந்தி
   2. கவுந்தி
   3. கண்ணகி
   4. மாதவி

6. அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு உறுதிப் பொருள்களைக் கூறும் இலக்கியம்
   1. சிற்றிலக்கியம்
   2. பெருங்காப்பியம்
   3. சிறுகாப்பியம்
   4. அகநானூறு

7. இசைக்கருவித்திறன், புதியநூல், ஆடல், வாய்ப்பாட்டு என்பவற்றை அரங்கிலே ஏற்பிக்கை செய்தலைக் குறிக்கும் சொல்
   1. எழினி
   2. அரங்கு
   3. அரங்கேற்றம்
   4. வெளியீடு

1 2 3 4

8. சொற்பொருள் விளக்கத்தை உள்ளடக்கமாகக் கொண்டது
   1. நேமிநாதம்
   2. தொல்காப்பியம்
   3. நன்னூல்
   4. நிகண்டு

9. பறவைகள் உயரப் பறந்தன. இதில் பறந்தன
   1. அஃறிணை ஒன்றன்பால்
   2. உயர்திணை ஒன்றன்பால்
   3. உயர்திணை பலர்பால்
   4. அஃறிணை பலவின்பால்

10. பாம்பின் வாழிடம் புற்று என்பதுபோல, குதிரையின் வாழிடம்
   1. தொட்டில்
   2. கொட்டில்
   3. வளை
   4. தொழுவம்

11. ‘கல்லைத்தான் மண்ணைத்தான் காய்ச்சித்தான் குடிக்கத்தான் கற்பித்தானா?....’ எனும் பாடலைப் பாடியவர்
   1. சின்னத்தம்பிப்புலவர்
   2. இராமச்சந்திர கவிராயர்
   3. பாரதிதாசன்
   4. உருத்திரமூர்த்தி

12. தாத்தா நாற்காலியில் அமர்ந்தார். இதில் நாற்காலி என்பது
   1. காரண இடுகுறிப்பெயர்
   2. காரணப்பெயர்
   3. பொதுப்பெயர்
   4. சிறப்புப்பெயர்

13. இராமச்சந்திர கவிராயர் வாழ்ந்த காலத்தில் வாழ்ந்தவர்
   1. பாரதிதாசன்
   2. காளமேகம்
   3. கல்லடிவேலுப்பிள்ளை
   4. சின்னத்தம்பிப்புலவர்

14. பின்வருவனவற்றுள் வியங்கோள் வினை
   1. படித்து
   2. வாழிய
   3. படித்த
   4. ஓடிய

15. இயற்கை எத்தனை அழகு! இதில் அழகு என்பது
   1. பெயர்ப்பகுசொல்
   2. வினைப்பகுசொல்
   3. பெயர்ப்பகாச்சொல்
   4. இடைப்பகாச்சொல்

1 2 3 4

16. தமிழரது முதற்கட்டப் புலப்பெயர்வுக்கான காரணம்
    1. எல்லை விரிவாக்கம்
    2. இன அழிப்பு
    3. ஆள்புலம் இழப்பு
    4. பொருண்மிய நோக்கம்

17. இரு, அழு, நட என்பன
    1. செயப்படுபொருள் குன்றிய வினைகள்
    2. செயப்படுபொருள் குன்றா வினைகள்
    3. வியங்கோள் வினைகள்
    4. தெரிநிலை வினைகள்

18. நனி, கழி, கூர், சால என்பன
    1. உவமையுருபுகள்
    2. வினைச்சொற்கள்
    3. உரிச்சொற்கள்
    4. பெயரச்சொற்கள்

19. தவம் செய்து கிடைக்கும் பயனைவிட மேலானது என வள்ளுவர் கூறுவது
    1. அறநெறிக்கு அமைய வாழுதல்
    2. பிறர் பழிக்க வாழுதல்
    3. அழுக்காறு கொள்ளுதல்
    4. சினங்கொள்ளுதல்

20. தொடர்மொழிக்கு எடுத்துக்காட்டாக அமைவது
    1. காற்று
    2. தாமரை
    3. வந்தான்
    4. அறம் செய விரும்பு

21. உறங்குதல் என்பதற்குப் பொருத்தமான மரபுச்சொற்றொடர்
    1. இடித்துரைத்தல்
    2. ஆழம்பார்த்தல்
    3. கண்வளர்தல்
    4. ஈடுகட்டுதல்

22. எண்ணும் எழுத்தும் இரு கண்களாகும். இதில் வந்துள்ள இடைச்சொல்
    1. உம்
    2. ஆகும்
    3. எண்
    4. கண்

**1 2 3 4**

23. மனத்தில் ஒன்றை வைத்துக்கொண்டு வெளியில் வேறொன்றைப் பேசக்கூடாது. இதற்குப் பொருத்தமான பழமொழி
    1. எய்தவன் இருக்க அம்பை நோவானேன்?
    2. அகல உழுவதை விட ஆழ உழுவதே மேல்.
    3. சுவர் இருந்தால்தான் சித்திரம் வரையலாம்.
    4. உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசாதே.

24. பேச்சின் வகைகளுள் பலர் அறியச் சொல்லுதல் என்பது
    1. பேசுதல்
    2. கூற்றுதல்
    3. இயம்புதல்
    4. பறைதல்

25. மாறன் சிறந்த பண்பாளன். இதில் பண்பாளன் என்பது
    1. தெரிநிலைவினை
    2. குறிப்புவினை
    3. தன்வினை
    4. பிறவினை

(25 X 1 = 25 புள்ளிகள்)

**2. தரப்பட்டுள்ள வினாக்களுள் ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. இளம்பூரணர் உரை எழுதிய இலக்கண நூல் எது?

___

2. சிலப்பதிகாரத்தில் கூறப்பட்டுள்ள அரங்கு பற்றிய செய்திகளுள் ஒன்றினை எழுதுக.

___

___

3. இலக்கியங்கள் எவற்றை அறியத் துணை நிற்கின்றன?

___

___

4. நாட்டுப்புறக் கலைகளுள் இரண்டினை எழுதுக.

___

5. புலம்பெயர் நாடுகளில் வாழும் ஈழத்தமிழர் அடுத்த தலைமுறையினருக்கு எவற்றைக் கடத்த முனைப்புடன் செயற்பட்டு வருகின்றனர்?

___

___

6. தொடர்ச்சொல்லியத்திற்கு ஓர் எடுத்துக்காட்டு எழுதுக.

______________________________

______________________________

7. கீழ்வரும் மரபுச்சொற்களுக்குப் பொருள் எழுதுக.

உச்சி குளிர்தல்: ______________________________

இடித்துரைத்தல்: ______________________________

(5 x 2 = 10 புள்ளிகள்)

**3. பாடலைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

தங்கத் தமிழ்ப் புலவன் சோமசுந்தரம் - அவன்
தந்த தமிழ்க் கவிதை எங்கள் மந்திரம்
பொங்கும் புலமைவளம் எங்கும் கனியுமே - அதில்
போற்றும் அருளமுதின் ஊற்றம் பொலியுமே

பழகுதமிழுமவன் பாட்டில் பயில்வதால் - பசும்
பாலின் சுவை எமக்குக் காட்டுகின்றதே
அழகு மயிலுங் குதித் தாடுகின்றதே - குயில்
ஆழி சூழ் இலங்கை வளம் பாடுகின்றதே

- கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை

1. தங்கத் தமிழ்ப்புலவன் என்று குறிப்பிடப்படுபவர் யார்?

______________________________

2. அழகு மயில் என்ன செய்கிறது?

______________________________

3. கவிஞர் மந்திரம் என்று எதைக் கூறுகிறார்?

______________________________

4. ஆழி சூழ் இலங்கையின் வளத்தைப் பாடுவது எது?

______________________________

(4 x 1 = 4 புள்ளிகள்)

**4. தரப்பட்டுள்ள பந்தியை வாசித்து, அதனை மூன்றிலொரு பங்காகச் சுருக்கி எழுதுக.**

ஒருவரது வாழ்க்கையில் உறவுகள் என்பது அவரோடு இரண்டறக் கலந்து, வாழ்வின் இறுதிவரை கூடவே வருவது. அந்த உறவுகளுள் முதன்மையானது நட்பாகும். நட்பு என்பது, எல்லா உறவுகளையும் விட மேம்பட்டது என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. நல்ல நண்பர்கள் அவ்வளவு எளிதில் கிடைக்கமாட்டார்கள். அப்படிக் கிடைத்தாலும் அந்த நட்பானது நீண்டநாள்கள் நீடிக்காது போவதும் உண்டு.

“நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண்
மேற்சென்று இடித்தற் பொருட்டு”

என்ற குறளுக்கமைய நம் வாழ்க்கையை அழகாகவும் பயனுள்ளதாகவும் மாற்றுவதில் நண்பர்களின் பங்கு மிகவும் இன்றியமையாதது. எந்த வகையான தன்னலமும் எதிர்பார்ப்பும் இல்லாமல் உண்மையாக நட்புக் கொள்ளவேண்டும். ஒவ்வொரு முறையும் நாம் புதியவர்கள் பலரைச் சந்தித்து, அவர்களுடன் நட்புப் பாராட்டுகின்றோம். வாழ்க்கை, வேலை உள்ளிட்ட காரணங்களால் அவர்களுக்கு நேரம் ஒதுக்க முடியாமல் போய்விடுகிறது. இதனால், நல்ல நண்பர்களை நாம் இழந்து விடுகின்றோம். வாழ்க்கைச் சுழற்சியின் காரணமாகப் பல ஆண்டுகள் பழகிய நண்பர்களைப் பிரிந்து போக நேரிடுகிறது. இன்றைய உலகில் இணையவழி ஊடாகத் தொடர்பு கொள்ள முடிந்தாலும் நண்பர்களுடன் நேரடியாகப் பேசுவது, சிரிப்பது, சுற்றித் திரிவது போல் இருக்காது. அவ்வகையில், ஒரு மேன்மையான நட்பு நிலைத்திருக்க வேண்டுமாயின் எதிர்பார்ப்புகளைக் குறைத்து, முரண்பாடுகளைத் தவிர்த்து, புரிதலுடன் விட்டுக்கொடுத்து நண்பர்களுடன் நாம் பழக வேண்டும். நேர்மையாகவும் உண்மையாகவும் பகிரப்படும் நட்பு எக்காலத்தும் விட்டுப்போகாது. எனவே, வாழ்வில் எல்லா வேளைகளிலும் துணையாக இருக்கக்கூடிய உண்மையான நட்பை வலுப்படுத்தி, நீண்டகாலம் தக்கவைக்க முயற்சிப்போம்.

(4 புள்ளிகள்)

**5. தரப்பட்டுள்ள பந்தியை வாழிடமொழியில் மாற்றி எழுதுக.**

**தமிழ்:**

எனது தங்கை குயிலியினது பள்ளியில் விளையாட்டுப் போட்டி நடைபெற்றது. விளையாட்டுப் போட்டி முற்பகல் பதினொரு மணிக்குத் தொடங்கியது. போட்டியில் பல விளையாட்டுகள் இடம்பெற்றன. குயிலி ஓட்டப்போட்டியிலும் உயரம் பாய்தல் போட்டியிலும் முதலாம் இடத்தைப் பெற்றாள். அதனால், அவளுக்கு இரண்டு போட்டிகளிலும் முதற் பரிசாக வெற்றிக் கிண்ணங்கள் கிடைத்தன. ஆசிரியர்கள், பெற்றோர்கள் அனைவரும் அவளைப் பாராட்டினார்கள். நண்பர்கள் குயிலிக்கு வாழ்த்துக் கூறினார்கள்.

(3 புள்ளிகள்)

**வாழிடமொழி:**

**6. தரப்பட்டுள்ளவற்றுள் ஒன்றைத் தெரிவுசெய்து ஆறு வரிகளுக்குக் குறையாமல் கவிதை எழுதுக.**

1. மொழி

**2.**



(4 புள்ளிகள்)

**7. தரப்பட்டுள்ள தலைப்புகளுள் ஒன்றைப்பற்றி 175 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

1. சோழர்காலம்
2. தமிழர் புலப்பெயர்வு
3. சூழல் மாசடைதல்

**உள்ளடக்கக் குறிப்புகள்:**

- சூழல் மாசடைவதற்கான காரணங்கள்
- சூழல் மாசடைவதால் ஏற்படும் விளைவுகள்
- சூழலைப் பாதுகாக்க மேற்கொள்ளும் வழிமுறைகள்

(15 புள்ளிகள்)

# பகுதி 2

## வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும்

**1. பந்தியை வாசித்து வினாக்களுக்கு முழுமையானவிடை எழுதுக.**

தமிழீழப் பெண் போராளிகளின் கவிதைகள், தனி மாந்த உணர்வுகளை மட்டும் வெளிப்படுத்தவில்லை. அவை முழு உலகிற்குமான மாந்த வாழ்வின் அவலங்கள், தேவைகள், மறுக்கப்பட்ட உரிமைகள் போன்றவற்றை உள்ளடக்கமாகக் கொண்டவை. அத்துடன் இக்கவிதைகள் போராட்டக் களத்தில் இணைந்து கொண்ட பெண்களின் மன உணர்வுகளையும் வலிமையையும் வீரம் செறிந்த துணிவான செயற்பாடுகளையும் பற்றிப் பேசுகின்றன. போராளிப் பெண்கள் போரில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டிருந்தாலும் தமக்குரிய அடையாளங்களுடனும் தன்மானத்துடனும் வாழ்ந்தார்கள். அத்துடன் இப்பெண்கள் மிகுந்த மனவலிமை கொண்டவர்கள் என்பதையும் இவர்களின் கவிதைகளிலிருந்து அறியலாம். இதற்கு எடுத்துக்காட்டாக பெண் போராளிக் கவிஞரான அம்புலியின் கவிதைகளைக் குறிப்பிடலாம். அம்புலியின் கவிதைகள் இயல்பாயும் மிகைப்படுத்தல் இன்றியும் காணப்படும். இவர் தனது கவிதைகளில் களப்போராட்டப் பட்டறிவுகளை நேர்மையாக வெளிப்படுத்தியுள்ளார். அத்துடன் அம்புலி தனது கவிதைகளில் தனக்கு ஏற்பட்ட இடர்களையும் தான் எதிர்கொண்ட அவலங்களையும் தனது விடுதலை வேட்கையையும் உணர்வுடன் எழுதியுள்ளார். இவரது கவிதைகளை போராட்டச் சூழ்நிலை என்ற உணர்வோடு படித்தால்தான் அவை ஆழ்மனத்துடன் பேசும் திறன் கொண்டவையாக அமைகின்றன. தமிழீழப் பெண் போராளிகள் சிலரின் கவிதைகள் தொகுக்கப்பட்டு ‘பெயரிடாத நட்சத்திரங்கள்’ என்ற பெயரில் 2011ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. இத்தொகுப்பில் அம்புலியின் கவிதைகளும் அடங்குகின்றன.

1. தமிழீழப் பெண் போராளிகளின் கவிதைகள் எவற்றைப் பற்றிப் பேசுகின்றன?

_______________________________________________

_______________________________________________

2. அம்புலி தனது கவிதைகளில் உணர்வுடன் எழுதிய விடயங்களுள் ஒன்றை எழுதுக.

_______________________________________________

_______________________________________________

3. பெண் போராளிகள் எப்படி வாழ்ந்தார்கள்?

_______________________________________________

_______________________________________________

4. அம்புலி தனது கவிதைகளில் எவற்றை வெளிப்படுத்தியுள்ளார்?

_______________________________________________

_______________________________________________

5. தமிழீழப் பெண்போராளிகள் சிலரின் கவிதைகள் தொகுக்கப்பட்டு எப்பெயரில் வெளிவந்தன?

_______________________________________________

_______________________________________________

(5 X 2 = 10 புள்ளிகள்)

**2. விளம்பரத்தை வாசித்து, தரப்பட்டுள்ள கூற்றுகள் சரியாயின் ✓ எனவும் பிழையாயின் × எனவும் அடையாளமிடுக.**

**உங்கள் பிள்ளைகளின் அறிவுத்திறனை வளமாக்க**
**சுவீடன் நாட்டில் அறிவொளி வழங்கும் அரிய வாய்ப்பு!**

**மார்ச் முதல் பெப்ரவரி வரை சனிக்கிழமைகளில்**
**ஓராண்டு கால கணினிப் பயிற்சி வகுப்பு!**

- ஒரு வகுப்பில் 25 மாணவர்கள் மட்டுமே இணைத்துக்கொள்ளப்படுவார்கள்.
- பள்ளியின் சிறப்புகள்:
    - காற்றோட்டமான வகுப்பறைச் சூழல்
    - கற்றலுக்கான இறுவட்டுகள்
    - இணைய வசதிகள்

**வகுப்பு நடைபெறும் நேரம்:** 9:00 - 11:00
உங்கள் பிள்ளைகளின் பெயர்களை இன்றே பதிவு செய்யுங்கள்!

**மேலதிக தொடர்புகளுக்கு:** அறிவொளி கல்வி நிலைய இணையத்தை நாடுங்கள்.

1. இது பெற்றோர்களுக்கான விளம்பரம் ( )
2. இக்கணினி வகுப்பில் 25 மாணவர்கள் மட்டுமே இணைத்துக்கொள்ளப்படுவார்கள். ( )
3. வகுப்பறையில் இணையத்தள வசதிகள் இல்லை. ( )
4. வகுப்பறை காற்றோட்டமில்லாமல் இருக்கும். ( )
5. இவ்வகுப்பு மாலை நேரத்தில் நடைபெறும். ( )

(5 X 1 = 5 புள்ளிகள்)

# பணியகப் பயன்பாட்டுக்கு மட்டும்

| வினா எண் | புள்ளிகள் | முதலாம் முறை | இரண்டாம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| எழுதுதல் | | | | |
| 1 | 25 | | | |
| 2 | 10 | | | |
| 3 | 04 | | | |
| 4 | 04 | | | |
| 5 | 03 | | | |
| 6 | 04 | | | |
| 7 | 15 | | | |
| வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும் | | | | |
| 1 | 10 | | | |
| 2 | 05 | | | |
| | மொத்தப் புள்ளிகள் | | | |

| | முழுப்பெயர் | கையொப்பம் |
|---|---|---|
| முதலாம் முறை | | |
| இரண்டாம் முறை | | |
| மேற்பார்வையாளர் | | |